# புனித லூர்து அன்னைத் திருத்தலம்

## 2025 ஆம் ஆண்டிற்கான கருத்து

### “அன்னை மரியாவுடன், எதிர்நோக்கின் திருப்பயணிகள்”

### உள்ளடக்கம்


**முகவுரை**

i. வார்த்தைகளுக்கான விளக்கம்

ii. எதிர்பார்ப்பு மற்றும் எதிர்நோக்கு: முக்கிய வேறுபாடு

iii. ஆண்டின் கருத்தை உணர்த்தும் முப்பரிமாண அணுகுமுறை

iv. விவிலியத் தொடக்கப்புள்ளி: லூக் 24:13-35

1. கைவிடுவதற்கும் விலகிச் செல்வதற்கும் காரணமாகும் மனத்துயரம்

2. எதிர்நோக்கின் சன்னலைத் திறக்கும் சந்திப்பு

3. எதிர்நோக்கைத் தூண்டியெழுப்பும் திருப்பயணச் செய்கைகளும் அடையாளங்களும்

4. எதிர்நோக்கின் மறைத்தூது திருப்பயணிகள்

**பிற்சேர்க்கை**

i) யூபிலிக் கீதம்

ii) யூபிலி இறைவேண்டல்


### முகவுரை

ஒவ்வோர் ஆண்டும், லூர்து அன்னைத் திருத்தலமானது ஒரு கருத்தை வழங்குகிறது. திருப்பயணங்களை ஏற்பாடு செய்வதற்கும், திருத்தல நிகழ்வுகளைத் திட்டமிடுவதற்கும் உதவியாக மக்களின் மேய்ப்புப் பணிகள் குறித்த பல்வேறு கருத்துக்களை திருப்பயணங்களை ஏற்பாடு செய்வர்களுக்கும் தலைவர்களுக்கும் வழங்குகிறது.

2025 ஆம் ஆண்டு ஒரு சிறப்பான ஆண்டாகும். இது யூபிலி ஆண்டு, கடன்களும் பாவத்திற்கானத் தண்டனைகளும் மன்னிக்கப்படும் 'அருளின் ஆண்டு' (எசா 61:2). வேறு வார்த்தைகளில் சொல்ல வேண்டுமெனில், யூபிலி என்பது, கடவுளின் எல்லையற்ற இரக்கத்தில் மூழ்கி எழுவதற்கான வாய்ப்பை எல்லாத் திருப்பயணிகளுக்கும் வழங்கும் மாபெரும் கொண்டாட்டமாகும்.

யூபிலி 2025 ஆம் ஆண்டிற்கான கருத்து "எதிர்நோக்கின் திருப்பயணிகள்" என்பதை நீங்கள் அறிவீர்கள். "எதிர்நோக்கு ஏமாற்றம் அளிக்காது" (உரோ 5:5) (Spes non confundit) என்னும் தலைப்பில் எழுதப்பட்ட திருத்தூது மடலில், திருத்தந்தை பின்வருமாறு தொடங்குகிறார்: "எதிர்நோக்கு என்பது இந்த யூபிலி ஆண்டின் மையச்செய்தியாகும். ஏனெனில், இன்றைய உலகில் நிலவும் எதிர்காலத்தைக் குறித்த நிச்சயமின்மை முரண்பாடான உணர்வுகளை உருவாக்குகின்றன. உறுதியான நம்பிக்கையிலிருந்து சஞ்சலத்திற்கும், மன அமைதியிலிருந்து கலக்கத்திற்கும், வலுவான உறுதிப்பாட்டிலிருந்து தயக்கத்திற்கும் சந்தேகத்திற்கும் இட்டுச் செல்கிறது. தளர்ச்சியடைந்த மனநிலையில், எதிர்நிறை எண்ணங்களோடு, எதிர்காலம் குறித்த பயத்தோடு, எதுவுமே தங்களுக்கு மகிழ்ச்சியைத் தரமுடியாது என்னும் மனநிலையிலுள்ள மனிதர்களை நாம் அடிக்கடி சந்திக்கிறோம் (எண். 1).

பொதுவாக, அமல அன்னை அல்லது புனித பெர்னதெத் ஆகியோரின் வார்த்தைகளை அடிப்படையாகக் கொண்டே லூர்தன்னைத் திருத்தலத்திலிருந்து ஆண்டிற்கான கருத்துகள் வழங்கப்படும். இந்த பாரம்பரியத்திலிருந்து சற்று விலகி, அகில உலக திருஅவையோடு இணைந்து பயணிக்கும் நோக்கில், அதே வேளையில், தனித்துவமிக்க லூர்தன்னைத் திருத்தலத்தின் சிறப்பியல்புகளையும் மரியியல் உணர்வு கலந்த அதன் குணங்களையும் விட்டுவிடாமல், "அன்னை மரியாவுடன், எதிர்நோக்கின் திருப்பயணிகள்" என்னும் சிந்தனையை இந்த ஆண்டிற்கான கருத்தாக வழங்கப்படுகிறது.

### i. "மரியாவுடன், எதிர்நோக்கின் திருப்பயணிகள்": வார்த்தைகளுக்கான விளக்கம்

**உடன் (With):** "உடன்" என்னும் வார்த்தை, முன்னிலைச் சொல; (preposition) வினையுரிச்சொல் (adverb) ஆகிய இருநிலைகளிலும், நமது திருப்பயணத்திற்கானத் தொணியைக் கட்டமைக்கிறது. இவ்வார்த்தையானது ஒருவரின் துணையில் இருப்பதை மட்டுமல்லாமல், ஒருவரோடு இணக்கமாக

இருப்பதையும் சுட்டிக்காட்டுகிறது. (நம்மை அழைப்பதற்கான முன்னெடுப்படுப்பை மேற்கொண்டவரும் நம்மோடு லூர்து நகரில் இருப்பவருமான) மரியாவுடனும், பெர்னதெத்துடனும், (மாபெரும் பன்முகத்தன்மை கொண்ட) அனைத்துத் திருப்பயணிகளுடனும் இணைந்து, கடவுளுடன் உறவை ஏற்படுத்துவதே நமது இலக்காகும்.

**திருப்பயணிகள்:** இவ்வார்த்தை பன்மையில் உள்ளது. மரியா மற்றும் பெர்னதெத்துடன் தொடங்கி, அனைத்துத் திருப்பயணிகளையும் உள்ளடக்கி நாம் பேசுகிறோம் என்பதை இது சுட்டிக் காட்டுகிறது.

**எதிர்நோக்கு:** இறையியல் பண்பான 'எதிர்நோக்கை' வரையறுப்பது நமது நோக்கமல்ல. "எதிர்நோக்கு அன்பிலிருந்து பிறக்கிறது. அதுவும், சிலுவையில், குத்தித் திறக்கப்பட்ட இயேசுவின் இதயத்திலிருந்து பொங்கிவழியும் அன்பிலிருந்து பிறக்கிறது" (எண். 3) என்னும் புரிதலை அடிப்படையாகக் கொண்டு, இந்த யூபிலி ஆண்டிலும், இந்த ஆண்டுக்கானக் கருத்திலும் எதிர்நோக்கின் மைய செயல்பாட்டை வலிறுத்துவதே நமது நோக்கமாகும். எதிர்நோக்கு ஒருபோதும் ஏமாற்றாது அல்லது ஏமாற்றம் தராது. ஏனெனில், எவரும் எதுவும் நம்மைக் கிறிஸ்துவின் அன்பிலிருந்து பிரிக்க முடியாது என்னும் உறுதியில் அது வேரூன்றியுள்ளது" (எண். 3, உரோ 8:35, 37-39). மேலும், எதிர்நோக்கு "நம்பிக்கையில் நிலைநிறுத்தப்பட்டு, அன்பினால் ஊட்டம் பெறுகிறது" (எண். 3).

### ii. எதிர்பார்ப்பு மற்றும் எதிர்நோக்கு: முக்கிய வேறுபாடு

எதிர்பார்ப்பு என்பது ஒரு வளமான எதிர்காலத்திற்காகக் காத்திருப்பது, எதிர்நோக்கு என்பது புதிய தொடக்கத்தை, வருகையை, திருவருகையைக் வரவேற்பது. எனவே, எதிர்நோக்கு என்பது வளமான வாழ்வை வாக்களிக்கும் எதிர்காலத்திற்கான ஏக்கத்தைக் குறிப்பதல்ல. மாறாக, நிலைவாழ்விற்கான வாக்குறுதியை அடிப்படையாகக் கொண்டு, நிகழ்காலத்தை வித்தியாசமான முறையில் வாழ்வதை, வரவேற்பதைச் சுட்டிக்காட்டுகிறது.

இச்சிந்தனையானது, "மகிழ்ச்சியை நான் உனக்கு வாக்களிக்கிறன்ளூ ஆனால் இவ்வுலகில் அல்ல, மறுஉலகில்" என்னும் அழகு அன்னையின் வார்த்தைகளை பிரதிபலிக்கிறது. பெர்னதெத் "எதிர்நோக்கின் அடையாளமாகத்" திகழ்கிறார். ஏனெனில், பல்வேறு இடையூறுகள் நிறைந்த வாழ்வில், நிலையான மகிழ்ச்சியை ஏற்கனவே வாழ்ந்து காட்டியவர் அவர்.

எனவே, ஒரு கேள்வியோடு நமது கருத்தை நாம் விரிவுபடுத்தலாம்: **எதிர்நோக்கின் திருப்பயணிகளாகிய நாம், எதற்காக, எவ்வாறு யூபிலி ஆண்டுத் திருப்பயணமாக லூர்து நகர் வந்து, அன்னை மரியாவோடும் பெர்னதெத்தோடும் பயணிக்க வேண்டும்?**

### iii. ஆண்டின் கருத்தை உள்வாங்குவதற்கான முப்பரிமாண அணுகுமுறை

நமது திருப்பயணங்கள் பின்வரும் கூறுகளை அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டும் என விரும்புகிறோம்:

- **எம்மாவு சீடர்களின்** அனுபவத்தினால் தூண்டப்படுதல் …
- அன்னை மரியாவை சந்தித்த, அவருக்குத் தன்னை அர்ப்பணித்த **பெர்னதெத்தின்** வாழ்வைப் பிரதிபலித்தல்.
- **ஒவ்வொரு திருப்பயணத்தையும், ஒவ்வொரு திருப்பயணியையும்** கவர்ந்திழுக்கும் ஊற்றாக மாறுதல்…

இந்த அணுகுமுறையானது, இறைவெளிப்பாட்டில் நமக்குள்ள நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டதாகும். ஏனெனில், மக்களின் வரலாற்று நிகழ்வுகளில் கடவுள் தன்னை வெளிப்படுத்துகிறார்: எம்மாவு சீடர்கள், பெர்னதெத்தின் வாழ்வு, மற்றும் லூர்து நகர் திருப்பயணிகள் வழியாகத் தன்னை வெளிப்படுத்துகிறார்.

இந்த அணுகுமுறையானது, பின்வரும் **நினைவுகளை** அனுபவிக்க நம்மை அழைத்துச் செல்கிறது:

**கடந்த காலத்தில்** எம்மாவு சீடர்கள் மற்றும் பெர்னதெத் மேற்கொண்ட பயண நினைவுகள்…

**நிகழ்காலத்தில்** (இன்று) நமது திருப்பயண நினைவுகள்…

இப்பொழுதும் நமது இறப்பு வேளையிலும், **நமது மண்ணகத் திருப்பயண நிறைவில்** வரவிருக்கும் வாக்குறுதியின் நினைவு…

### iv. விவிலியத் தொடக்கப் புள்ளி: லூக் 24:13-35

*13 அதே நாளில் சீடர்களுள் இருவர் எருசலேமிலிருந்து ஏறத்தாழ பதினொரு கிலோ மீட்டர் தொலையிலுள்ள ஓர் ஊருக்குச் சென்றுகொண்டிருந்தனர். அவ்வூரின் பெயர் எம்மாவு. 14 அவர்கள இந்நிகழ்ச்சிகள் அனைத்தையும் குறித்து ஒருவரோடு ஒருவர் உரையாடிக்கொண்டே சென்றார்கள். 15 இப்படி அவர்கள் உரையாடிக்கொண்டும் வினவிக்கொண்டும் சென்றபோது, இயேசு நெருங்கிவந்து அவர்களோடு நடந்து*

*சென்றார். [16]ஆனால், அவர் யார் என்று அறிந்து உணரமுடியாதவாறு அவர்கள்
கண்கள் மறைக்கப்பட்டிருந்தன. [17]அவர் அவர்களை நோக்கி, ‘‘வழிநெடுகிலும்
நீங்கள் ஒருவரோடு ஒருவர் பேசிக் கொண்டிருப்பது என்ன?’’ என்று கேட்டார்.*

*அவர்கள் முகவாட்டத்தோடு நின்றார்கள். [18]அவர்களுள் கிளயோப்பா என்னும்
பெயருடைய ஒருவர் அவரிடம் மறுமொழியாக, ‘‘எருசலேமில் தங்கியிருப்பவர்களுள்
உமக்கு மட்டும்தான் இந்நாள்களில் நிகழ்ந்தவை தெரியாதோ! என்றார். [19]அதற்கு
அவர் அவர்களிடம், ‘‘என்ன நிகழ்ந்தது?’’ என்று கேட்டார். அவர்கள் அவரிடம்,
‘‘நாசரேத்து இயேசுவைப் பற்றியோதான் பேசுகிறோம். அவர் கடவுளுக்கும் மக்கள்
எல்லாருக்கும் முன்பாகச் சொல்லிலும் செயலிலும் வல்ல இறைவாக்கினராகத்
திகழ்ந்தார். [20-21]அவர் இஸ்ரயேலை மீட்கப் போகிறார் என்று நாங்கள் எதிர்பார்த்து
இருந்தோம். ஆனால், தலைமைக்குருக்களும் ஆட்சியாளர்களும் அவருக்கு மரண
தண்டனை விதித்துச் சிலுவையில் அறைந்தார்கள். இவையெல்லாம் நிகழ்ந்து
இன்றோடு மூன்று நாள்கள் ஆகின்றன. [22]ஆனால், இன்று எங்களைச் சேர்ந்த
பெண்களுள் சிலர் எங்களை மலைப்புள்ளாக்கினர், அவர்கள் விடியற்காலையில்
கல்லறைக்குச் சென்றார்கள், [23]அவருடைய உடலைக் காணாது திரும்பி வந்து,
வானதூதர்களைக் கண்டதாகவும் இயேசு உயிரோடிருக்கிறார்கள் என்று அவர்கள்
கூறியதாகவும் சொன்னார்கள். [24]எங்களோடு இருந்தவர்கள் சிலரும் கல்லறைக்குச்
சென்று, அப்பெண்கள் சொன்னவாறே இருக்கக் கண்டனர். ஆனால், அவர்கள்
இயேசுவைக் காணவில்லை’’ என்றார்கள்.*

*[25]இயேசு அவர்களை நோக்கி, ‘‘அறிவிலிகளே! இறைவாக்கினர்கள் உரைத்த
எல்லாவற்றையும் நம்ப இயலாத மந்த உள்ளத்தினரே! [26]மெசியா தாம்
மாட்சியடைவதற்கு முன் இத்துன்பங்களைப் பட வேண்டுமல்லவா!’’ என்றார்.
[27]மேலும், மோசேமுதல் இறைவாக்கினர்வரை அனைவரின் நூல்களிலும் தம்மைக்
குறித்து எழுதப்பட்ட யாவற்றையும் அவர் அவர்களுக்கு விளக்கினார்.*

*[28]அவர்கள் தாங்கள் போகவேண்டிய ஊரை நெருங்கி வந்தார்கள். அவரோ அதற்கு
அப்பால் போகிறவர் போலக் காட்டிகொண்டார். [29]அவர்கள் அவரிடம், ‘‘எங்களோடு
தங்கும்ளூ ஏனெனில், மாலை நேரம் ஆயிற்று, பொழுதும் போயிற்று’’ என்றுகூறிக்
கட்டாயப்படுத்தி அவரை இணங்க வைத்தார்கள். அவர் அங்கு தங்குமாறு
அவர்களோடு சென்றார். [30]அவர்களோடு அவர் பந்தியில் அமர்ந்திருந்தபோது,
அப்பத்தை எடுத்து, கடவுளைப் போற்றி, பிட்டு அவர்களுக்குக் கொடுத்தார்.*

*[31]அப்போது அவர்கள் கண்கள் திறந்தன. அவர்களும் அவரை அடையாளம் கண்டுகொண்டார்கள். உடனே அவர் அவர்களிடமிருந்து மறைந்துபோனார்.*

*[32]அப்போது, அவர்கள் ஒருவரையொருவர் நோக்கி, "வழியிலே அவர் நம்மோடு பேசி, மறைநூலை விளக்கும்போது நம் உள்ளம் பற்றி எரியவில்லையா?" என்று பேசிக் கொண்டார்கள்.*

*[33]அந்நேரமே அவர்கள் புறப்பட்டு எருசலேமுக்குத் திரும்பிப் போனார்கள். அங்கே பதினொருவரும் அவர்களோடு இருந்தவர்களும் குழுமியிருக்கக் கண்டார்கள்.*
*[34]அங்கிருந்தவர்கள், "ஆண்டவர் உண்மையாகவே உயிருடன் எழுப்பப்பட்டார். அவர் சீமோனுக்குத் தோற்றம் அளித்துள்ளார்" என்று சொன்னார்கள். [35]அவர்கள்*
*வழியில் நிகழ்ந்தவற்றையும் அவர் அப்பத்தைப் பிட்டு கொடுக்கும்போது அவரைக் கண்டுணர்ந்து கொண்டதையும் அங்கிருந்தவர்களுக்கு எடுத்துரைத்தார்கள்."*

## எம்மாவு தொடங்கி மசபியேல் வழியாக நமது காலம்வரை:

### யூபிலித் திருப்பயணத்தின் நான்கு நிலைகள்:

### 1. கைவிடுவதற்கும் விலகிச் செல்வதற்கும் காரணமாகும் மனத்துயரம்

எம்மாவு சீடர்கள்/திருப்பயணிகள் நடந்த அனைத்தையும் குறித்து தங்களுக்குள்ளே பேசிக்கொள்கின்றனர்: உரையாடுகிறார்கள், கேள்வி எழுப்புகிறார்கள், முகவாட்டத்தோடு காணப்படுகிறார்கள், நடந்த நிகழ்வுகளால் முழுவதும் ஆட்கொள்ளப்படட்டவர்களாக, குழப்பமடைந்தவர்களாக, வருத்தமுற்றவர்களாக, அனைத்தையும் இழந்த நிலையில் காணப்படுகின்றனர். எம்மாவு நோக்கிய பயணத்தில், தாங்கள் சற்றுமுன் அனுபவித்திருந்த துன்பியல் நிழ்வுகளைக் குறித்து உரையாடுகின்றனர். தங்களுக்குள்ளே உரையாடிக் கொண்டிருக்கிறார்கள், அத்துயரமானது தங்களோடு நடந்துவரும் அன்னியரைக் கண்டுணரத் தடையாக இருந்தது.

*"அவர் இஸ்ரயேலை மீட்கப் போகிறார் என்று நாங்கள் எதிர்பார்த்து இருந்தோம்"* (லூக் 24:20-21). அவர்களது நம்பிக்கை சிதறடிக்கப்படுகிறது. நடந்து முடிந்த நிகழ்வுகளால் அவர்கள் முழுவதும் ஏமாற்றமடைந்துள்ளனர். *"இவையெல்லாம் நிகழ்ந்து இன்றோடு மூன்று நாள்கள் ஆகின்றன"* (லூக் 24:20-21). தங்களின் உள்ளத்திலிருந்த துயரத்தால், பெண்கள் அறிவித்த நற்செய்தியையும் அவர்களால்

உணர முடியவில்லை: *“ஆனால், இன்று எங்களைச் சேர்ந்த பெண்களுள் சிலர் எங்களை மலைப்புக்குள்ளாக்கினர், அவர்கள் விடியற்காலையில் கல்லறைக்குச் சென்றார்கள்ளூ அவருடைய உடலைக் காணாது திரும்பி வந்து, வானதூதர்களைக் கண்டதாவும் இயேசு உயிரோடிருக்கிறார் என்று அவர்கள் கூறியதாகவும் சொன்னார்கள். எங்களோடு இருந்தவர்கள் சிலரும் கல்லறைக்குச் சென்று, அப்பெண்கள் சொன்னவாறே இருக்கக் கண்டனர். ஆனால், அவர்கள் இயேசுவைக் காணவில்லை.”* (லூக் 24:22-24). நடைபெற்ற நிகழ்வுகள் தாங்கள் விரும்பியதைப் போல அமையாததால், சீடர்கள் நம்பவில்லை. விறகுகளைச் சேகரிப்பதற்காக பெர்னதெத்தும் மசபியேல் குகைக்குப் புறப்பட்டுச் சென்றார். அவர் உடல் நலமற்றிருந்தார். ஆயினும், தனது சிறிய வீட்டைவிட்டு, அவர் வெளியே செல்ல வேண்டியிருந்தது.

இவ்வாறு, குளிர் காலத்திற்குரிய கடுமையான குளிரையும், வறுமையின் உச்சத்தையும், மிகவும் இருண்ட ஓர் எதிர்காலத்தையும் அவர் அனுபவித்துக் கொண்டிருந்தார். தனது சூப்பைச் சூடுபடுத்துவதற்காக விறகுகளைச் சேகரிக்க அவர் குகைக்குச் சென்றார்.

நமது திருப்பயணிகள் பல்வேறு விதமான சவால் நிறைந்த சூழ்நிலைகளின் சுமைகளோடு தங்கள் வீடுகளைவிட்டு அடிக்கடி வெளியேறுவதுண்டு. எந்தளவு எனில், எம்மாவு சீடர்களைப் போல, பிறரால் தங்களுக்குத் தரப்படும் குறைந்த பட்ச நம்பிக்கையின் ஒளிக்கீற்றைக் கூட அவர்கள் கண்டுணர்வதில்லை. ஒருவேளை, முதல் அறிவிப்பு அவர்களுக்குத் தோல்வியில் முடிந்திருக்கலாம். உங்களோடு பயணிக்கும் பெரும்பாலான திருப்பயணிகளுக்கு இதுவே தொடக்கப் புள்ளியாகும்.

யூபிலி ஆண்டு திருத்தூது மடலில், இவ்வுலகம் பயம், அவநம்பிக்கை (ஊக்கமின்மை) மற்றும் சந்தேகங்களுக்கிடையே (ஐயங்கள்) ஊஞ்சலாடிக் கொண்டிருப்பதைத் திருத்தந்தை அங்கிகரிக்கிறார். “எதனாலும் தங்களுக்கு மகிழ்ச்சியைத் தரமுடியாது என்னும் முடிவோடு, அவநம்பிக்கையோடும் எதிர்மறை எண்ணங்களோடும் எதிர்காலத்தைக் குறித்தப் பயத்தோடும் வாழும் மக்களை நாம் அடிக்கடி சந்திக்கிறோம்” என்னும் எதார்த்ததை அவர் ஏற்றுக்கொள்கிறார் (எண். 1).

மற்றொரு தியான உரையில், “எதிர்நோக்கு இறந்துவிட்டதா? ஒளி மற்றும் இலக்கில்லாத வாழ்வில் இந்த உலகம் நிலைத்து நின்றுவிடுமோ?” என்னும் கேள்விகளை எழுப்புகிறார்.

**மேய்ப்புப் பணிக்கான பரிந்துரை**

**இந்த யூபிலி ஆண்டில், இன்றைய உலகம் எதிர்கொண்டிருக்கும் பிரச்சனைகளை திருத்தந்தை நமக்கு நினைவூட்டுகிறார்:**

- போரினால் ஏற்படும் துயரம் (எண். 8),
- வாழ்வையும் வாழ்வின் மகிழ்ச்சியையும் துறந்துவிட விரும்புதல் (எண். 9),
- சிறைப்பட்டோர், சுதந்திரம் பறிக்கப்பட்டவர்கள், அல்லது குறைந்தபட்சம் தங்களின் நெருங்கிய உறவினர்களிடமிருந்து பிரிக்கப்பட்டவர்கள் (எண். 10),
- நோயுற்றவர்கள் (எண். 11),
- இளம் வயதுடையவர்கள் (எண். 12),
- புலம் பெயர்ந்தவர்கள் (எண். 13),
- பெரியவர்கள் (முதியவர்களை) (எண். 14), மற்றும்
- ஏழைகள் (எண். 15).

இயேசு எம்மாவு சீடர்களுக்குச் செய்ததைப் போல, நமது திருப்பயணிகள் இவ்வுலகில் தங்களது வாழ்வில் சந்திக்கிற கவலைகளைப் பகிர்ந்து கொள்ள வழிவகுப்போம். அவர்களுக்காக இறைவேண்டல் செய்வோம். அவர்களோடு இணைந்து, திருத்தந்தை கூறுவதைப் போல, நாமும் திருப்பயணத்தில் ஈடுபடுவோம், எதிர்நோக்கின் தாயான அன்னை மரியாவிடம் வேண்டுவோம்: "இவ்வாறு நீங்கள் சீடர்களின் மத்தியில், அவர்களின் தாயாகவும் எதிர்நோக்கின் தாயாகவும் நிலைத்திருப்பீர்கள். கடவுளின் தாயும் எங்கள் தாயுமான தூய அன்னையே, உம்மோடு இணைந்து நாங்கள் நம்பிக்கை கொள்ளவும், எதிர்நோக்கவும், அன்பு செய்யவும் கற்றுத் தருவீராக!"

## 2. எதிர்நோக்கின் சன்னலைத் திறக்கும் ஒரு சந்திப்பு

*"அறிவிலிகளே! இறைவாக்கினர்கள் உரைத்த எல்லாவற்றையும் நம்ப இயலாத மந்த உள்ளத்தினரே! மெசியா தாம் மாட்சியடைவதற்கு முன் இத்துன்பங்களைப் பட வேண்டுமல்லவா!"* (லூக் 24:25-26).

எம்மாவு நோக்கிய சீடர்களின் பயணத்தின் போது, இயேசுவே வருகிறார், அவர்களோடு நடக்கிறார், கேள்விகள் எழுப்புகிறார், அவர்களுக்குக் கற்றுக் கொடுக்கிறார்.

மறைநூலுக்கு விளக்கம் கொடுக்கிறார், அவர்கள் புரிந்துகொள்ளும் விதத்தில் அதற்கு புதிய அர்த்தத்தைக் கொடுக்கிறார். அனைத்திற்கும் மேலாக, அவர் இம்மானுவேல், ''கடவுள் நம்மோடு.''

லூர்து நகரில், அமல உற்பவி பெர்னதெத்துக்குத் தோன்றி, சிலுவை அடையாளம் வரையவும், மாண்போடு செபமாலை செபிக்கவும் கற்றுக் கொடுத்தார். இவ்வாறு, அவரது கலக்கத்திற்கும் பயத்திற்கும் முற்றுப்புள்ளி வைத்தார்.

லூர்து நகரில், ஒரு திருப்பயணியாக, பெர்னதெத் நம் எல்லோரையும் ஒன்றாக ஈர்த்துக் கொள்கிறார். ஏனெனில், அவரும் நம்மைப் போன்றவரே. அவர் வழியாக, அன்னை மரியாவிலும் அவரது இறைமகனிலும் விண்ணகத்தின் நெருக்கம் நமக்கு வழங்கப்படுகிறது. அவர்கள் நம் அருகில் வந்து, நமக்கு சொல்லிக் கொடுத்து, கற்றுத் தந்து, உறுதியளிக்கிறார்கள்.

ஒவ்வொரு திருப்பயணியும், தான் பார்க்காததை நம்ப மறுக்கும் இவ்வுலகின் ஒரு மகனாக அல்லது மகளாக திகழ்கிறார்... நோய்களின் அருகுறிகளோடு நோயுற்றவராகக் காணப்படுகிறார், எல்லா வகை சோதனைகளாலும் துன்பப்படுகிறார்... இருப்பினும், ''*நம்பிக்கை என்பது நாம் எதிர்நோக்கி இருப்பவை கிடைக்கும் என்னும் உறுதி, கண்ணுக்குப் புலப்படாதவை பற்றிய ஐயமற்ற நிலை*'' (எபி 11:1).

திருப்பயணம், இவ்வகையில், நம்பிக்கையின் பயணமாக மாறுகிறது. அடிப்படை கிறிஸ்தவ வாழ்க்கையைப் போலவே, இப்பயணம் "மிகத் தீவிரமான தருணங்களில் உற்சாகப்படுத்தவும் எதிர்நோக்கில் நிலைத்திருக்கவும் அழைப்பு விடுக்கும் பயணமாகும். அது, நிலையான மற்றும் நீங்காத வழித்துணைவனைப் போல,

ஆண்டவராகிய இயேசுவை சந்திக்கும் இலக்கை நோக்கி நாம் எடுத்துவைக்கும் ஒவ்வொரு அடியிலும் வழிநடத்துவதாகும்'' (எண். 5).

இத்தகைய சந்திப்பையே பெர்னதெத் தனக்குரிய பாணியில் மசபியேல் குகையில் மேற்கொண்டார். இத்தகைய சந்திப்பையே திரும்பத் திரும்ப மேற்கொள்ளுமாறு அனைத்துத் திருப்பயணிகளும் யூபிலி ஆண்டில் அழைக்கப்படுகிறார்கள்.

லூர்து நகரில், வாழ்வின் ஒவ்வொரு பகுதியும் கடவுள் மற்றும் அமல உற்பவ கன்னி மரியாவின் நெருக்கத்தால் தொடப்பட வேண்டும்.

லூர்து நகருக்கு வருதல் என்பது, உங்களது பயத்தை உதறித் தள்ளிவிட்டு, உங்களது மாண்பைத் திரும்பப் பெறுவதாகும். அப்படியெனில், ''*வழியிலே அவர்*

*நம்மோடு பேசி, மறைநூலை விளக்கும் போது நம் உள்ளம் பற்றி எரியவில்லையா?"* (லூக் 24:32) என்று சொன்ன எம்மாவு சீடர்களைப் போல, அனைத்துத் திருப்பயணிகளும் கூற முடியும். அல்லது, பெர்னதெத்தைப் போல அவர்களால் சொல்ல முடியும்:

- ஒருவர் மற்றவரோடு பேசுவதைப் போல அவர் என்னிடம் பேசினார்.
- குகையே எனது விண்ணகமாகும்.
- உம்மைத் தியானிக்கையில் கிடைக்கும் இன்பத்தால், ஓ நல்ல தாயாரே! என் ஆன்மா எவ்வளவு மகிழ்ச்சியடைகிறது! எங்களுக்கான நன்மைத்தனமும் இரக்கமும் நிறைந்த உம்முடைய பார்வையின் நிழலில், நான் செலவழித்த விலைமதிப்பற்ற தருணங்களை நினைத்துப் பார்க்க, நான் எவ்வளவு ஆசைப்படுகிறேன்!

## மேய்ப்புப் பணிக்கான பரிந்துரை

இந்த யூபிலி ஆண்டில், திருத்தலம் மற்றும் தனிநபர் திருப்பயணங்கள், இந்த ஆவணத்தின் முதல் பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள சவாலான சூழ்நிலைகளில் ஏதேனும் ஒன்றின் மீது சிறப்புக் கவனம் செலுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

'எதிர்நோக்கின் சன்னலைத் திறந்துவிடும் சந்திப்பை' உருவாக்கும் பொருட்டு, ஒவ்வொரு திருப்பயணியையும், குறிப்பாக, தனது குழுமத்திலுள்ள மிகவும் பலவீனமானமான ஆட்டின் மீது தனிக்கவனம் செலுத்தி, தேடிச் சென்று அரவணைப்பது, ஒவ்வொரு தலைவரையும் பொறுத்தது.

**எதிர்நோக்கைப் பரிந்துரைக்க, பின்வரும் அம்சங்கள் வலியுத்தப்பட வேண்டும்:**

- அழகு, அதாவது, திருப்பயணத்தின் சீரான அமைப்பு.
- வண்ணங்கள் (நிறங்கள்), அதாவது. திருப்பயணத்தின் பன்முகத்தன்மை மற்றும் தனித்துவம்.
- புன்சிரிப்புகள், அதாவது, நோயுற்றோர்.
- உற்சாகம், அதாவது, இளைய வயதுடையோர்
- ஞானம், அதாவது, பெரியவர்கள்
- மகிழ்ச்சி, அதாவது, பணிவிடை புரிதல்
- ஆன்மீகம், அதாவது, இறைவேண்டலின் கொடை

## 3. எதிர்நோக்கைத் தூண்டும் திருப்பயணத்தின் செய்கைகளும் அடையாளங்களும்

திருப்பயணத்தின் கால அட்டவனை பயனுள்ளதாக அமையும் பொருட்டு ஒரு சில எளிமையான, சாத்தியமுள்ள நடைமுறைகளை நாங்கள் முன்னெடுக்கிறோம்.

*"அவர்களோடு அவர் பந்தியில் அமர்ந்திருந்த போது அப்பத்தை எடுத்து, கடவுளைப் போற்றி, பிட்டு அவர்களுக்குக் கொடுத்தார். அப்போது அவர்கள் கண்கள் திறந்தன. அவர்களும் அவரை அடையாளம் கண்டுகொண்டார்கள். உடனே அவர் அவர்களிடமிருந்து மறைந்து போனார்"* (லூக் 24:30-31).

நற்கருணைக் கொண்டாட்டம் எம்மாவு சீடர்கள் சற்றும் எதிர்பாராத முடிவாகும். கிறிஸ்துவின் உச்சகட்ட தியாகத்தையும் நமது மீட்பையும் குறிக்கும் வலிமையான அடையாளத்திற்கு அவர்கள் சான்று பகர்கிறார்கள். நற்கருணையைப் பிட்டு கொடுக்கையில் அவர்கள் ஆண்டவரை அடையாளம் கண்டு கொள்கிறார்கள்.

திருக்காட்சிகளின் போது, பெர்னதெத்தும் இயேசுவுடன் இத்தகைய நெருக்கத்தைக் கண்டுணர வேண்டியிருந்தது. ஒப்பரவு மற்றும் நற்கருணை அருளடையாளங்கள் மூலம் இந்த சந்திப்பை அவர் அனுபவித்தார். அன்னை மரியாவின் வார்த்தைகளை ஏற்றுக் கடைபிடிப்பதன் வழியாக, 'மறுவுலகை எதிர்நோக்க' தன் இதயத்தைத் திறந்து வைத்தார்.

அழகு நிறைந்த அன்னையின் வார்த்தைகள், சுருங்கக் கூறின், நற்செய்தியை எதிரொலிக்கின்றன. தனது பதிலிறுப்பில், புல்லை உண்ணுதல், முழங்கால் படியிட்டு நடத்தல், சேற்றை எடுத்து முகத்தில் பூசுதல் போன்ற மனத்துயர் செய்கைகளை பெர்னதெத் நிறைவேற்றினார். இத்தகைய செய்கைகள் அனைத்திலும் அவரது தியாகம் நிறைந்திருந்தது. "அவைகள் எனக்கு எத்தகைய பாதிப்பை ஏற்படுத்தின என்பதை நீங்கள் அறிந்திருக்க வேண்டும்" அவரே கூறுகிறார். இருப்பினும், அருளடையாள வாழ்வே அவரது நம்பிக்கையின் மிகவும் குறிப்பிடத்தக்க அம்சமாகும். முதல் திருக்காட்சிக்குப் பிறகு அவர் ஒப்புரவு அருளடையாளத்தை நிறைவேற்றச் சென்றார். 17 மற்றும் 18 ஆம் திருக்காட்சிகளுக்கு இடையில், அவர் நற்கருணையைப் பெற்றுக் கொண்டார். லூர்து நகர் பங்குத் திருஅவைக்கு தான் கொடுத்திருந்த வாக்குறுதியை மறக்காமல், 1858 ஆம் ஆண்டு "மரியாவின் பிள்ளை"யாக மாறினார். இறுதியாக, நெவர் அன்பின் அருள்சகோதரிகள் சபை துறவற வாழ்விற்கும் கிறிஸ்தவ கற்பித்தலுக்கும் தன்னை அர்ப்பணித்தார்.

கடவுளை நோக்கி, ‘‘எங்களோடு தங்கும்’’ என்று ஒவ்வொரு குழுவும் ஒவ்வொரு திருப்பயணியும் இறைவேண்டல் செய்வதால், திருப்பயணம் என்பது அடிப்படையில் குழுவாகவும் தனியாகவும் இறைவேண்டல் செய்வதற்கான நேரமாக மாறுகிறது. இறைவேண்டலானது பின்வருவனற்றை பிரித்தறிய நமக்கு துணைபுரிகிறது.

- நன்மையையும் தீமையையும்,
- உண்மையையும் பொய்மையையும்,
- அன்பையும் சுயநலத்தையும்,
- சரியானதையும் தவறானதையும்,
- நம்பிக்கையையும் பயத்தையும்,
- மனஅமைதியையும் குழப்பத்தையும்,
- உறுதிப்பாட்டையும் ஐயப்பாட்டையும்.

சுருங்கக் கூறின், இது நமக்குள்ளே ஓடிக் கொண்டிருக்கும் முரண்பாடான உணர்வுகளை வகைப்படுத்துவதாகும். இறைவார்த்தை ஒளியினால் விளையும் உய்த்துணர்தல், இதயங்களை தீயினால் பற்றியெரியச் செய்யும் வல்லமை படைத்ததாகும்.

திருப்பயணங்கள் அருளடையாள வாழ்விற்கான தளங்களாகத் திகழ வேண்டும். லூர்து திருத்தலமானது, குறிப்பாக, மூன்று அருளடையாளங்களை வழங்குகிறது: நற்கருணை, ஒப்புரவு மற்றும் நோயில் புசுதல். இம்மூன்று அருளடையாளங்களும் கடவுளிடமிருந்து வரும் அன்பு, இரக்கம் மற்றும் மீட்பினை அனைவருக்கும் சுட்டிக்காட்டுகின்றன. அருளடையாளங்கள், குறிப்பாக யூபிலி ஆண்டில், மனமாற்றம் என்னும் கொடையையும் பரிபுரண பலனுக்கான அருளையும் நமக்குத் தருகின்றன (எண். 23).

அருளடையாளங்களைப் போலவே, லூர்து திருத்தலமானது பக்தி முயற்சிகளை (குறிப்பாக, செபமாலை) முன்னெடுப்பதற்கான வாய்ப்புகளையும் வழங்குகிறது. இப்பக்தி முயற்சிகள் ‘‘கிறிஸ்தவ வாழ்வின் இதயமான மூன்று இறையியல் மதிப்பீடுகளை’’ மக்கள் வெளிப்படுத்த உதவுகின்றன (1 கொரி 13:13, 1 தெச 1:3). எனவே, அனைத்தையும் மாற்றும் வல்லமை படைத்த திருப்பயண செய்கைகளில் அனைத்து திருப்பயணிகளும் முழு ஈடுபாட்டுடன் பங்கு பெற அழைக்கப்படுகிறார்கள். ஏனெனில், வாழ்வின் மிகவும் இருண்ட நிகழ்வுகளைக்கூட

எதிர்நோக்கின் வழியாக வித்தியாசமான முறையில் பாரக்கும் வண்ணம் நம்மை இச்செய்கைகள் மாற்றுகின்றன.

- பாறை என்னை உறுதிப்படுத்தி, எனது பயத்திலிருந்து என்னைக் காப்பாற்றுகிறது.
- மெழுகுவர்த்தி எனக்கு ஒளி தந்து, இரவை விரட்டுகிறது.
- நீருற்று எனக்கு தண்ணீரைக் கொடுத்து, எனது தாகத்தை விரட்டுகிறது.
- பவனி மற்றவர்களோடு இணைந்து, கிறிஸ்து மற்றும் அவரது தாயின் அடிச்சுவட்டில் நடக்க உற்சாகப்படுத்தி, எனது தனிமை உணர்வுகளை விரட்டுகிறது.
- நீரில் முழ்கி எழுதல் என்னைத் தூய்மைப்படுத்தி, எல்லா அழுக்குகளையும் கழுவி அப்புறப்படுத்துகிறது.
- நற்கருணை எனக்கு உணவளித்து, ஆன்மீகப் பசியிலிருந்து என்னைப் பாதுகாக்கிறது.
- ஒப்புரவு என்னை மீட்டெடுத்து, ஆன்மீக வீழ்ச்சியிலிருந்து என்னைப் பாதுகாக்கிறது.
- சிலுவைப் பாதை என்னை ஆற்றுப்படுத்தி, கைவிடப்பட்டதாக உணரும் எண்ணங்களை என்னிடமிருந்து விரட்டுகிறது.

இத்தகைய செய்கைகளோடு சேர்த்து, லூர்து திருத்தலமானது இப்புனித ஆண்டில், **எதிர்நோக்கின் யூபிலிப் பயணத்தை** உங்களுக்கு வழங்குகிறது. இது நம்மை மனத்துயரிலிருந்து ஆறுதலுக்கு நடத்திச் செல்லும்.

### மேய்ப்புப் பணிக்கான பரிந்துரை

நமது இலக்கு புதிய செய்கைகளை உருவாக்குவது அல்லளூ மாறாக, அருளடையாளங்களையும் லூர்து நகர் அடையாளங்களையும் புதுப்பிக்கப்பட்ட பார்வையோடு, எதிர்நோக்கின் அடிப்படையில் அனுபவிப்பதே ஆகும்.

**நற்கருணை,** என்றென்றும் நிலைத்திருக்கும் திருமண விருந்தின் முன்னடையாளமாகும்.

**ஒப்புரவு,** மன்னிப்பின் வழியாக இறையரசில் நுழைவதற்கான வாக்குறுதியாகும்.

**பாறை,** நமது பலவீனமான தருணங்களில் கடவுளின் நிலையான பலத்தைக் குறிக்கும் அடையாளமாகும்.

**மெழுகுவர்த்தி,** நமது போராட்டங்கள், துயரங்கள் என்னும் இருளில் ஒளிரும் நிலையான ஒளியின் அடையாளமாகும்.

## 4. எதிர்நோக்கின் மறைத்தூது திருப்பயணிகள்

*"உடனே அவர் அவர்களிடமிருந்து மறைந்து போனார்... அந்நேரமே அவர்கள் புறப்பட்டு எருசலேமுக்குத் திரும்பிப் போனார்கள். அங்கே பதினொருவரும் அவர்களோடு இருந்தவர்களும் குழுமியிருக்கக் கண்டார்கள். அங்கிருந்தவர்கள், "ஆண்டவர் உண்மையாகவே உயிருடன் எழுப்பப்பட்டார். அவர் சீமோனுக்குத் தோற்றம் அளித்துள்ளார்" என்று சொன்னார்கள். அவர்கள் வழியில் நிகழ்ந்தவற்றையும் அவர் அப்பத்தைப் பிட்டுக் கொடுக்கும்போது அவரைக் கண்டுணர்ந்து கொண்டதையும் அங்கிருந்தவர்களுக்கு எடுத்துரைத்தார்கள்" (லூக் 24:31-35).* எம்மாவு நோக்கிய திருப்பயணம் முடிவுற்றது. அந்நேரமே அவர்கள் திரும்ப வேண்டியிருந்தது. நேரத்தை வீணடிக்காமல், கன்னித்தாய் விரைந்து சென்றதைப் போல, அவர்களும் எழுந்து, எருசலேம் திரும்பினார்கள். இந்த எருசலேம்தான் அவர்கள் பயணத்தைத் தொடங்கிய புள்ளி, அவர்கள் வாழ்ந்த ஊர், எம்மாவுக்குச் செல்லாமல், சீடர்களும் அனைத்து நம்பிக்கையாளர்களும் ஒரே குழுமமாகக் காத்திருந்த ஊர். தங்களது திருப்பயணத்தில் தாங்கள் அனுபவித்ததை எடுத்துரைக்கவும், அறிவிக்கவும், சான்று பகரவும் சென்றார்கள். உயிர்த்த இயேசுவின் உடனிருப்பும் விலகுதலும் அவர்கள் மறைத்தூது பணியாளர்களாக மாறுவதற்கானத் தூண்டுதலாக அமைந்தது.

அழகிய பெண் விலகிய பிறகு, பெர்னதெத் குளிர்ந்த நீரைக் குறித்து ஒருபோதும் பயப்படவில்லை (அது அவருக்கு வெதுவெதுப்பாகவே தோன்றியது). மேலும், அவர் தனது சகோதரியான துவானெத் (Toinette) மற்றும் அவர்களது நண்பரான ஜாணி அபாதி (Jeanne Abadie) ஆகியோர் விறகுகளைச் சுமப்பதற்கும் உதவி செய்தார். குகையை விட்டு நீங்கிய பிறகு, விரைந்து சென்று, குருவிடம் அழகியப் பெண்ணின் பெயரையும், குருக்களிடமிருந்து அவர் எதிர்பார்ப்பதையும் எடுத்துரைத்தார் (அவர்கள் பவனியான அங்கு வரவேண்டும், அவ்விடத்தில் ஒரு சிறிய கோயில் கட்ட வேண்டும்), சொல்வதும் சாட்சியம் பகர்வதும் தனது கடமையென்பதை அவர் அறிந்திருந்தார். திருக்காட்சிகள் நிறைவு பெற்ற பின்னர், அவர் லூர்து நகரை விட்டுச் சென்று, புனிதமான மறைத்தூதுவராக, எதிர்நோக்கின் தூதுவராக (எதிர்நோக்கைத் தாங்கிச் செல்பவராக) மாறினார்.

திருப்பயணத்திற்கு பிற்பகுதி ஒன்று உண்டு. நாம் லூர்து நகரை விட்டு விலகி, சான்று பகரவும், எதிர்நோக்கின் மறைத்தூதுவர்களாக மாறவும், நமது இல்லம்,

நமது குடும்பங்கள், நமது பங்குகள், மற்றும் நமது வாழ்வை நோக்கிச் செல்ல வேண்டும். *“ஆகையால், நீங்கள் உங்கள் நம்பிக்கையோடு நற்பண்பும், நற்பண்போடு அறிவும், அறிவோடு தன்னடக்கமும், தன்னடக்கத்தோடு மனஉறுதியும், மனஉறுதியோடு இறைப்பற்றும், இறைப்பற்றோடு சகோதர நேயமும், சகோதர நேயத்தோடு அன்பும் கொண்டு விளங்குமாறு முழு ஆர்வத்தோடு முயற்சி செய்யுங்கள்”* என்று புனித பேதுரு நம்மிடம் கூறுகிறார் (2 பேது 1:5-7). இத்தகைய எதிர்நோக்கையே இந்த புனித ஆண்டில் லூர்து நகருக்கு வரும் ஒவ்வொரு திருப்பயணியும் ஏந்திச் செல்ல வேண்டும்.

திருத்தந்தை சொல்வது போல், நாம் ஒவ்வொருவரும் எதிர்நோக்கின் நங்கூரங்களாகத் திகழ வேண்டும்: நங்கூரத்தின் வடிவம் உன்னதமானது, நாம் நம்மை ஆண்டவராகிய இயேசுவிடம் ஒப்படைக்கும் பொழுது, கொந்தளிக்கும் நீரைப் போன்ற நமது வாழ்வில் நமக்கான உறுதித்தன்மையும் பாதுகாப்பையும் கண்டுணர நங்கூரம் உதவுகிறது. நம்மை அலைக்கழிக்கச் செய்யும் புயல் ஒருபோதும் வெற்றி பெறாது. ஏனெனில், அருளின் ஊற்றிலிருந்து பிறந்த எதிர்நோக்கில் நாம் உறுதியாக நங்கூரமிட்டுள்ளோம். இதுவே நாம் கிறிஸ்துவில் வாழவும், பாவம், பயம், மற்றும் இறப்பு போன்றவற்றை வென்றெடுக்கவும் ஆற்றலைத் தருகிறது. இந்த எதிர்நோக்குதான் விரைவில் மறையக்கூடிய இன்பங்கள் மற்றும் நமது உடனடி

இலக்குகளை நிறைவேற்றி புரிந்த சாதனைகள் போன்றவற்றை கடந்து செல்லச் செய்கிறது, நமது சோதனைகள், கஷ்டங்கள் போன்றவற்றிலிருந்து மேலெழும்பச் செய்கிறது, தொடர்ந்து முன்னோக்கிச் செல்ல நம்மை அழுத்திக்கொண்டும், நமது அழைப்பின் நோக்கமான விண்ணக இலக்கின் மேன்மையிலிருந்து நமது பார்வையை ஒருபோதும் விலக்காமல் இருக்கவும் நம்மைத் தூண்டுகிறது… நம்பிக்கையாளர்களின் சாட்சியம் நமது உலகிற்கு **உண்மையான எதிர்நோக்கின் புளிப்பு மாவாக** இருப்பதாக, **புதிய விண்ணகம், புதிய மண்ணகத்தின் முன்னோடியாகத்** திகழ்வதாக (காண்க. 2 பேது 3:13). அங்கே ஆண்களும் பெண்களும் நீதியிலும் ஒற்றுமையிலும் வாழ்வார்கள், ஆண்டவரின் வாக்குறுதிகள் நிறைவேறுவதை மகிழ்ச்சியுடன் எதிர்பார்த்திருப்பார்கள் (எண். 25).

### மேய்ப்புப் பணிக்கானப் பரிந்துரை

மசபியேல் குகை நீரூற்றிலிருந்து நமது வீடுகளுக்கும் குடும்பங்களுக்கும் தண்ணீரை முகர்ந்து செல்வது போல, திருப்பயணிகள் அனைவரும் எதிர்நோக்கையும் வாழ்வையும் ஏந்திச் செல்பவர்களாக இருக்க வேண்டும். திருப்பயணத்தின் போது பொருட்கள், படங்கள், இறைவேண்டல்கள் போன்ற அடையாளங்கள் கிடைக்கப் பெறலாம். இவ்வடையாளங்கள், “ஆண்டவரையும் அயலாரையும் அன்பு செய்”

என்னும் ஒரே கட்டளையைக் கடைப்பிடித்து சாட்சிகளாக வாழவும், எதிர்நோக்கின் தூதுவர்களாகவும் செயல்படுடவும் உறுதுணையாக இருக்கின்றன (காண்க. மாற் 12:30-31). பெர்னதெத் கூறுவது போல, "**அன்பு செய்வதே போதுமானது.**"

## முடிவுரை

சுருக்கமாகக் கூற வேண்டுமெனில், அனைத்துலக திருஅவையோடு ஒத்திசைந்து, யூபிலி ஆண்டில் லூர்து நகருக்குத் திருப்பயணம் மேற்கொள்வது ஒரு பயணத்தைக் கட்டமைப்பதாகும். வாழ்வில் கஷ்டங்கள் இருந்தாலும், பிறரோடு இணைந்து, குறிப்பாக, அன்னை மரியாவோடும் பெர்னதெத்தோடும் இணைந்து, அருளடையாளங்கள் மற்றும் பக்தி முயற்சிகள் வழியாக பயணிப்போம்.

இப்பயணமானது எதிர்நோக்கை கட்டியெழுப்பவும், அதன் சாட்சிகளாகவும் மறைத்தூதுவர்களாகவும் பணிபுரியும் வாய்ப்பையும் தருகிறது. இவ்வாறு, யூபிலி ஆண்டான 2025ல், அன்னை மரியாவுடன் இணைந்து, எதிர்நோக்கின் திருப்பயணிகளாக திகழ்வோம்.

## பிற்சேர்க்கை

### 1. யூபிலிப் பாடல்

### 2. யூபிலி இறைவேண்டல்

எங்கள் விண்ணகத் தந்தையே, நீர் எங்களுக்கு அளித்துள்ள உம் திருமகனும் எங்கள் சகோதரருமாகிய இயேசு கிறிஸ்துவின் மீதுள்ள நம்பிக்கையும் தூய ஆவியார் எங்கள் இதயங்களில் ஏற்றிவைத்துள்ள அன்பின் சுடரும் உமது ஆட்சியின் வருகைக்கான அருள்மிகு எதிர்நோக்கை எங்களிடம் தூண்டி எழுப்புவனவாக!

நற்செய்தியின் விதைகளை அயராது பயிரிடுபவர்களாக உமது அருள் எங்களை உருமாற்றுவதாக! புனித வானமும் வையகமும் வரும் எனும் உறுதியான எதிர்நோக்குடன் அவ்விதைகள் மனிதகுலத்தையும் அகிலம் முழுவதையும் உள்ளிருந்து உருமாற்றுவனவாக! அதனால் தீமையின் ஆற்றல்கள் அழித்தொழிக்கப்பட்டு உமது மாட்சி என்றென்றும் ஒளிர்வதாக!

எதிர்நோக்கின் திருப்பயணிகளாகிய எங்களிடம் விண்ணகக் கொடைகளுக்கான ஏக்கத்தை இந்த யூபிலியின் அருள் தூண்டி எழுப்புவதாக! இவ்வருள் நம் மீட்பர் தரும் மகிழ்ச்சியையும் அமைதியையும் உலகெங்கும் பரப்புவதாக! என்றென்றும் போற்றுதற்குரிய எங்கள் இறைவனாகிய உமக்கே மாட்சியும் புகழும் என்றென்றும் ஆகுக! ஆமென்!